“ இந்திர கோபம்,” “எனக்கு மோக்ஷம் எப்பொழுது?” இதில் முக்கியமானவை.


# தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஷு புரட்டாசிமீ 8உ (24-9-'22.) | ப. 22.


விஷய அடக்கம்.


1. மகாத்மா காந்தியின் மேல் பாட்டு .... 213
(ஸ்ரீமதி பால ஸுந்தரி தேவி)—
2. வர்த்தமானம் ... ... 214
3. எனக்கு மோக்ஷம் எப்பொழுது? .... 215
(பத்திராதிபர் எழுதியது)—
4. பாத கண்ட புராதனம் .... 215
(ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன். பி.ஏ. பி.எல்)
5. ஓர் ஸம்பாஷணை. .... .... 217
6. இந்திர கோபம் .... .... 218
(ஸ்ரீமான் ராம சந்திரர் எழுதியது)—
7. புயற்காற்று .... .... 219
—(ஸ்ரீமான் V. நாராயணய்யர் M.A. M.L., எழுதியது


## மகாத்மா காந்தியின்மேல் பாட்டு

“ அழைத்துவரச் சொன்னாடி அண்ணர் சபைதன்னில் நாடி ” என்ற மெட்டு.

[ஸ்ரீமதி பாலஸுந்தரி தேவி]

1. ஆரிய நாட்டிலுதித்த சீரியரைப் பாருங்கோடி
பாரிலெங்கும் வ்யாபித்திடும் பகலவன்போல் கீர்த்திபெற்றார்.

2, காந்தி மஹா புருஷர்வெகு சாந்திகுடி கொண்டவாரம்
எந்திழையோரே நாமெலாம் சேர்ந்தவரை வாழ்த்திடுவோம்-ஆரிய

3. மிகத்தாழ்ந்தபேரிடத்தும் மகத்தான அன்புடையார்
அகத்தூய்மை பெற்றதொரு அருந்தவசி இவர்தானடி ஆரிய

4. ஏழை இந்தியாவுக்குத்தான் ஊழியங்கள் செய்யவென்று
வாழ் நாட்களை விநியோகித்து ஊழ்வினையகற்றுபவர் ஆரிய

5. எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற கருணையினால்
அல்லல்களைத்தான் சகித்த இல்லறத்துறவி இவர் ஆரிய

6. அலையலையாய்த் துன்பம் வந்தே அடித்துத்தள்ளி மோதினாலும்
மலைபோன்ற சலனமற்ற மனவுறுதி பெற்றவராம். ஆரிய

7, எந்த நிலை வாய்த்திடினும் சிந்தைநிலை மாறாமலே
வந்திடும் துன்பங்களைத் தாம் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்-ஆ

## வர்த்தமானம்.

வங்காள நாட்டு பாபு ஸோமேச வஸு என்பவர் கணிதசாஸ்த்ரத்தின் ஒரு துறையில் அபூர்வ ஆற்றல் உடையவர் எனத்தோன்றுகிறது. 18,17,947 என்னும் தொகையை அத்தொகையினாலேயே பெருக்கி மனக்கணக்காய் ஈவுத்தொகையைச் சொன்னாராம். கல்கத்தா கெப்பெல் வீதியில் வித்யார்த்திகள் வாஸஸ்தலத்தில் வித்தியார்த்தியொருவர் நாற்பது எண்களடங்கிய இரண்டு தொகைகளைக் கறுப்புப்பலகையில் சீமைச்சுண்ணும்பிட்டெழுத, அவற்றின் பெருக்கல் தொகையைச் சுமார் 25 நிமிஷங்கள்வரை கண்ணைமூடி உதடுகளில் எண்கள் தவழ்வதுபோல் காண,யாதொரு சிரமமும் பட்டதாகவே தோன்றாத முகத்துடன் மனதிலேயே கணக்கு செய்து ஈவுத்தொகையைச் சிறிதும் தப்பிதமின்றி எழுதிமுடித்தார். இத்யாதி அத்புத செயல்கள் செய்யும் அந்நிபுணரின் வித்யாபிவிருத்தியின் நிலைமையென்ன? இதரவிஷயங்களில் அவருடைய புத்தியும் யுக்தியோசனைகளும் எத்தன்மையன? அவருக்கு இவ்வித ஆற்றலுக்குக்காரணம் மனிதரால் அறியக்கூடியதோ? அல்லது 'வரப்ரஸாதமென்று' தெய்வத்தின்மேல் பாரத்தைப்போட்டுவிட்டு நாம் அண்ணாந்து நிற்கவேண்டியதுதானோ?

நமது கவர்நரவர்களுடையவும் சர்க்கார் நிர்வாக சபை அங்கத்தினர்களுடையவும் ஜனப்ரதிநிதிகளாம் அமைசர்களுடையவும் (1-1-1921—31-3-1922) தேசஸஞ்சார செலவு ஜாபிதா ஒன்று லெஜிஸ்லேடிவ் சபையில் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. கவர்னர்வர்கள் நாடுவலம் வந்த செலவு ரூ ,133,307-6-1. ! ஸர்லேயனல் டேவிட்ஸன், ரூ 6063. 1. 0! ஸர் சார்லஸ் டாட்ஹண்டர் 2293-1-10! கான் பஹதூர் சர் மஹம்மது ஹபிபுல்லா சாஹேப் பஹதூர் ரூ 13851-14-6 ! கே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ரூ9988-2-6 ! ஏ. ஆர். நாப் ரூ 3248-14-9! பனகல் ராஜா ரூ 10753-0-0! ராவ்பஹதூர் கே. வேங்கடரெட்டி நாயுடு ரூ 1642-0-9! ராவ்பஹதூர் பாத்ரோ 6755-2-3 ! சுப்பராயலுரெட்டியார் ரூ 1085.14.3 !

ஹெண்ட்ஜன் என்னும் ஜெர்மானிய வித்யார்த்தியொருவர் இஞ்ஜின் அல்லது மோடார் இல்லாத ஒரு ஆஹாயக்கப்பலில் ககனமார்க்கத்திலேறி சுமார் இரண்டு மணிநேரம் அவ்விடமிருந்து விட்டுக் கீழ் இறங்கியதாகத் தெரிகிறது. அப்போது 300அடி உயரமுள்ள ஒரு மைதானத்தினின்று பூமியானது படிப்படியாய்ச் சரிவாயிருக்கும் தரையின் முகமாய்ப் பலத்தகாற்று மேல்நோக்கி அடித்துக்கொண்டிருந்தது. அவரும் அவரது நண்பர்கள் சிலரும் அவ்விதம் வீசும் காற்றின் ஸ்வபாவத்தையும் போக்கையும் வெகு காலம் கவனித்து அதனுடைய குணகுணங்களை யாராய்ந்து சமயம் பார்த்துக்காற்றுடன் அதன் பலத்தை முன்னிட்டு உயரக் கிளம்பி, ஒரு முறை அவ்வாறு எழும்பிய பின், தம் சாமார்த்யத்தால் அதிக லாகவத்துடன் காற்றின் போக்கிலேயே யந்தரங்களைப் போகவிட்டு இரண்டு மணிநேரம் விண்ணுலகவிவாகளாக மாறிநின்று, மறுபடியும் தமது யாதார்த்த நிலைமை ஞாபகத்துக்கு வரப்பூமியை யடைந்தனர். இந்நவீன ஆச்சர்யத்தைக் கேள்வியுற்ற ஐரோப்பியர்கள், யுத்தகாலத்தில் கால்நடைப்படைகள் வருங்காலத்தில் வெட்டுக்கிளிகள்போல் கூட்டங்கூட்டமாய் ஆகாயத்தில் பறந்து ஊரூராய்த்வம்ஸம் செய்து சத்ருக்களை ஜயிக்கக்கூடும் என்ற எண்ணம் மேலிட்டவராயிருக்கின்றனர். காலத்தின் கொடுமையோ, பணப்பேயின் கோலமோ, இத்தகைய நூதன ஆற்றல் பலருக்குண்டானால் எவ்வளவு சீக்கிரம் ஓரூரினின்று மற்றோர் ஊர்போய் ஆங்காங்குள்ள ஜனங்களுடைய கஷ்டநஷ்டங்களை நிவர்த்திக்க சந்தர்ப்பமேற்படும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏனோ உண்டாகவில்லை?

டாக்டர் ப்ராணஜீவன்தாஸ் மேதா, எம்.டி. பாரிடர் (ரங்கோன்) தம்முடைய ஸஹோதரர் ரேவ்சங்கர ஜகஜ்ஜீவன் மூலமாய்க் குஜராத் வித்யாபீடத்துக்கு இரண்டரைலக்ஷரூபாய் நன்கொடையளித்ததாகத் தெரிகிறது.வல்லபபாய்ப் படேல் என்பவரும் இன்னும் தேசாபிமானிகள் சிலரும் ஷெ வித்தியாபீடத்துக்காகச் சந்தா சேர்த்துவருவதாகவும், பம்பாயில் மாத்திரம் ஏற்கனவே ஒரு லக்ஷத்துக்குமேல் சேர்ந்திருப்பதாகவும், மஹாத்மா காந்தியின் ஜன்மதினமாகிய அக்டோபர்மீ 2உக்குள் பத்து லக்ஷம்வரைக்கும் திரட்டக்கூடுமென்றும் பம்பாயிலிருந்து தந்தி சமாசாரம்.

'நாஷனல் லிபரல் பெடரேஷன்' தேசிய லிபரல் மிதவாதிக் கக்ஷியாரின் ஐக்யசங்கம்—இச்சங்கத்து அகில இந்திய அங்கத்தினர் சபை—யொன்று அக்டோபர் 8உ சென்னையில் கூடுவதாகவும் அச்சமயம் ப்ரதமமந்த்ரியாரது ப்ரஸங்கம்,தற்கால தேசிய நிலைமை, ராஜாங்கக் கைதிகளை நடத்தும் விதம், இஞ்ச்கேப் விசாரணைச் சங்கத்தாருக்கு எடுத்துக்காட்டவேண்டிய குற்றங்குறைகள்,சர்க்கார் கார்ய நிர்வாக அங்கத்தினர்கள், அமைச்சர்கள் இவர்களுடைய ஸங்க்யைகளைக் குறைத்தல், 'பெஸண்ட் அம்மையாரின்' டில்லி ஸமாவேசம்'. இவை முதலான விஷயங்களைப் பற்றி ஆலோசனை நடக்கப்போவதாகவும் ஷெ ஐக்கிய கார்யதரிசி தெரிவிக்கின்றனர்.

குரு-கா-பாக் ஸ்தலத்தில் போலீஸார் செய்ததாகப் பழி சாட்டப்படும் அக்ரமங்களைக்குறித்துப் பஞ்சாப் டெப்யுடி போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல், அவருக்குத் தெரிவிக்கப்படும் தகவாலான செயல்களைப் பற்றி விசாரிக்கப்போவதாகப்பஞ்சாப் கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கிறார்கள்.

16-9-22 சண்டை நிறுத்தம்' வேண்டுமானால் பின் வரும் ஷரத்துக்களைக் கிரோக்கர்கள் ஒத்துக்கொள்ள வேண்டு மென்றும் அவைதவிர்த்து இதர ஷரத்துக்கள் எதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாது என்றும் துருக்கியர்கள் சொல்வதாக 'அங்கோரா' கவர்னமெண்டார் செய்தி கிடைத்திருக்கிறது.

(1.) எவ்வித நிபந்தனையுமின்றிக் கிரேக்கர்கள் தாங்கள் கைப்பற்றிய ப்ரதேசம் முழுவதையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(2.)'ஆசியாமைனர்' 'த்ரெஸ்' இந்நாடுகளுக்குத் துருக்கியரே அதிபதிகளென அங்கீகரித்துக்கிரேக்கர்கள் அந்நாடுகளைப்பற்றிய ஆசைகளனைத்தையும் அறவே ஒழிக்கவேண்டும்.

(3.)கிரேக்கர்களால் உண்டாகிய சகல நஷ்டங்களையும் சீர் செய்து துருக்கியர்களுடைய செலவைக் கட்டிக்கொடுக்க வேண்டியது.

(4.)படையெடுப்புகாலத்தில் கோரகருத்யங்களை யிழைத்த குற்றவாளிகளனைவரையும் கிரேக்கர்கள் ஒப்புவித்து விடவேண்டியது.

அருக்கியர் கைப்பட்ட 'ஸ்மர்னா' நகரத்தில் ஒரு பெரிய தீக்கிளம்பி ஊரெங்கும் பரவி, லக்ஷக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பண்டங்கள் பஸ்மமாயினவென்றும், சுமார் ஆயிரம் இரண்டாயிரம் ஜனங்கள் அத்தீயில் மடிந்தனரென்றும், 'அங்கோரா' கவர்ன்மெண்டார் கைதிசெய்த சில அர்மீனியர்களும் கிரேக்கர்களும் தாங்கள்தான் தீவைத்தவர்களென்று ஒப்புக்கொண்டனரென்றும், பலர் துருக்கியரால் வேற்றூர் கொண்டுபோகப்பட்டனரெனவும், எரிந்து நாசமுற்ற பண்டங்களில் பாதி மட்டுமே 'இன்ஷ்யூர்' செய்யப்பட்டவையெனவும் செய்தி.

கான்ஸ்டேண்டிநோபிளுக்கு அடுத்ததுபோலிருக்கும் பாஸ்பரஸ் ஜலசந்தியின் காப்புக்கு முக்ய ஸதானமாகிய 'சானக்' பிரதேசத்தினின்று ப்ரென்சு வீரர்கள் விலகிவிட்டனரென்றும், பிரிட்டிஷர்களும் அவ்வாறே செய்வார்களென்றும் ப்ரென்சு பத்திரிகைகள் எழுதுகின்றன.

மாஜி கெய்ஸருக்கும், முதல் விவாஹத்தால் ஐந்து மக்களைப் பெற்றுள்ள ஹேர்மியோன் வான் ஷானெக் காரேலத் அரசிக்கும், நவம்பர் மாதத்தில் கல்யாணம் நடைபெறப் போகிறதாம். இப்போது கெய்ஸர் கல்யாணத்தைக் குறித்து யோசித்ததின் காரணம் அவர் டோர்ன் நகரத்தில் ஏகாந்தமாயிருத்தலில் பொழுது போவது கஷ்டமாயிருக்ககின்றதாம்.

19-9-22 பாட்டு 'தாய்நாடு' அல்லது 'மதர் லண்ட்' பத்திரிகையின் ஆசிரியராகிய மஸ்ருல் ஹேக், அவருக்கு விதிக்கப்பட்ட அபராதம் அவருடைய சொத்து பறிமுதலாகி ஜப்தி செய்யப்பட்ட வகையில் வசூலாய்விட்டபடியால், அவருடைய சிறைவாஸ அவதிக்காலம் முடியுமுன்னரே விடுதலை செய்யப்பட்டனராம்.

செப்டம்பர் மாதம் 19உ யன்று பட்டப் பகலில் இங்குமங்கும் மப்புசூழ்திருந்த தெருக்களிலிருந்த ஜனங்கள் கண்களுக்கு ஆகாயத்தில் பிரகாசமான நவக்ரஹஙகளிலொன்று தென்பட்டதாம். இத்தகைய காட்சி 'டார்ஜிலிங்' முதலிய மலைநகர்களில் சாதாரணமாய்க் காணக்கூடியதாம். ஸெயிண்ட ஜேவியர் காலெஜ் 'நக்ஷத்ராபீஸ்' தலைவர் ரெவரெண்ட் வெர்மியர் தாம் அந்தக் ரஹத்தை நேரில் பார்க்காவிட்டாலும் ஜனங்கள் சொல்லும் அதன் ஸ்தானத்தைக்கவனித்து அக்கிரஹம் சுக்கிரனாய் இருக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

வியாழக்கிழமை சூரிய கிரஹணத்தன்று குருக்ஷேத்ரத்திலுள்ள புண்ய தீர்த்தத்தில் (தடாகம்) ஸ்நானம்செய்வதற்காக டெல்லியிலிருந்து குருக்ஷேத்ரத்துக்குப்பிரதிதினமும் 20,000 ஜனங்கள் விழுக்காடு 14 ஸ்பெஷல் ட்ரெயின்கள் சென்றனவாம்.

---

## எனக்கு மோக்ஷம் எப்பொழுது?

[பல மாதங்களுக்கு முன் பஞ்சமர்கள் விஷயமாக மகாத்மா காந்தி ஓர் கடிதம் எழுதினார். சென்ற திங்கட்கிழமை (18—9—1922) அவர் பிறந்த தினமானதால், அம்மகா புருஷனுடைய கோரிக்கைகளுள் மிகவும் நேர்த்தியாய் இருப்பதொன்றைப் பற்றி, இப்பகுதியில், எழுத எண்ணினோம். அக்கடிதத்தைத் தமிழில் நாம், ஒருமுறை, மொழி பெயர்த்திருக்கின்றோம்; ஆயினும் நமது "தமிழ் உலகிலு"ம் அதை வெளிப்படுத்துவதால், நம்மையே நாம் உயர்த்திக் கொள்ளுவதல்லாமல், மகாத்மா காந்தியின் லோகோத்கிருஷ்டமான உபதேசத்தை, மறுபடியும், இங்கு தமிழர்களின் பிரயோஜனத்திற்காகவே எடுத்தெழுதியதாகவும் ஆகுமல்லவா?—

பத்திராதிபர்]

"பறையர்கள்" என்ற ஒரு காரணத்திற்காக, தத்வத்தைக் கண்டுபிடித்த, ஹிந்துக்களான, நாம் இனிமேலும் அவர்களை ஒதுக்கி வைப்போமாகில், அச்செயல் அஸுரக் கிருத்யங்களைப் பார்க்கிலும் உயர்ந்ததென்று நாம் சொல்லக் கூடுமா? இதில் எனக்கு ஒருபோதும் சந்தேகமே யில்லை. இம்மகா கோரத்தைத் தொலைத்துத் தலைமுழுகினாலொழிய, ஸ்வராஜ்யமென்பது கொஞ்சமும் கிட்டாதது. இப்பாப நிவர்த்திக்காக, சிரமத்தையே பாராமல், என் முழு மனதையும் இதில் செலுத்த நானிப்போது முன்வந்திருக்கிறேன். ஏனென்றால், இப்பெரும் விஷயத்தில் ஜனங்கள் மிகவும் அசிரத்தையுடன் நடந்து வருகிறார்கள். ஸ்வராஜ்யமாகிய ஒப்பற்ற வரனை ஸர்வேசனிடமிருந்து பெறுவதற்காக இக்கடும் தவத்தை நாம் புரிந்து வருகிறோம். அப்போது, அவரால் படைக்கப்பட்ட எவனையுங் காட்டிலும், மிக்கத் தகுதியுள்ள, பறையர்களான, அவர் குழந்தைகளிடமிருந்து, ஸ்வாதீனம் முதலான மனுஷ்யனின் உரிமைகளை நாம் பிடுங்குவது சரியா? அன்பு, தயவு, தாக்ஷிண்யம், இவைகளைத் துறந்த நாம் ஸர்வேசனது சபையில், நம்மைப் பிறரின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்க, அவரைத் தலை நிமிர்ந்து கேட்பதற்கு நமக்கு வாக்கு எங்கிருந்து வரும்? பறையர்களின் சுகதுக்கங்களுக்கு பாத்தியப்படுவதற்காகவும், பின்பு அவர்களை இந்த நரகத்திலிருந்து முக்திபெறச் செய்வதற்காகவும், மறுஜன்மமென்பது ஒன்று உண்டாகில், என் னடுத்த ஜன்மத்தில் நான் புலையனாகப் பிறக்கவேணுமென்றே அப் பரம்பொருள் என்னை அனுக்கிரகிப்பாராக! பிராமணனாகவாவது, க்ஷத்திரியனாகவாவது, அல்லது, வைசியன், அல்லது சூத்திரனாகவாவது, மறுபடியும் இப்பூமண்டலத்தில் அவதரிக்க நான் விரும்பவில்லை. தை பிறக்கும் முன், இப்பாபம் நம் தேசத்தை விட்டு நீங்க வேண்டும். உளுத்த எலும்பும், வெளுத்த தசையும் போட்டடைத்த இக்கூட்டில் நான் அடைபட்டிருப்பதற்கு ரகசியமான ஆசைகள் பல எனக்கிருக்கின்றன. அவைகளுக்குள் பறையர்களின் மீக்ஷியென்பது ஒன்று; இரண்டாவது, பசுக்களின் ஸம்ரக்ஷணையென்பதே. இவ்விரு மனோரதங்களும் நிறைவேறுமாகின், அப்பொழுதுதான் ஸ்வராஜ்யம் என்ற அமுதம் நமக்கு வாய்க் கெட்டியதாகும். மேலும் அப்பொழுதுதான் நானும் மோக்ஷமடைந்தவனாவேன்.

—பத்திராதிபர்.

---

## பரதகண்ட புராதனம்

[வெ. கா, ராமநாதன் பி, ஏ. பி. எல்.]

ரவீந்தரநாத் தாகூர் ஏற்படுத்தியுள்ள 'விசுவபாரதி' யெனும் ஸர்வகலா சபையைச் சார்ந்தவராகிய ப்ரென்சு நாட்டுப் பண்டிதராம் ஸில்வேய்ன் லெவி யென்பவர் இந்திய புராதனத்தைப்பற்றிச் செய்துள்ள பிரஸங்கத்தின் ஸாராம்சத்தை நம் வாசகர்கள் நன்மைக்காக எழுதலானோம்.

ப்ராங்ஸ் நாட்டுக் காலாசாலையில் கீழ்த்தேசத்துச்சாஸ்திராராய்ச்சி பண்டிதர் ஸ்தானத்தை வகிக்கும் ஸில்வேய்ன்லெவி தாம் 39 ஆண்டுகளாக நமது நாட்டு ஸாஹித்ய சரித்ர இதிஹாஸ புராணாதிகளில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து, அவைகளை உத்தாரணம் செய்வதாக எவ்வளவோ பாடுபட்டு வருகின்றனர். சாஸ்திராதிகளுக்கு அதிஷ்டான தேவதையை வழிபாடுசெய்து அதன்மூலமாகவே ஸத்யமென்னும் தேவதையை உபாஸிப்பதையே தம் வாழ்நாட்களின் முக்கிய லக்ஷ்யமாகக்கொண்டு உழைக்கும் கல்விமான்களில் முதன்மை பெற்றவர்.

முதன்முதலில் உலகத்தில் ஆதிமுதல் நடைபெற்றுள்ள பிரதி சண்டைசச்சரவுகளும், யுத்தங்களும் அவை நடைபெறும் காலத்தில் உபயகக்ஷியார் தமக்குள் உள்ள பரஸ்பர விரோதத்தையும், மிருகத்தன்மையையும் வெளியெடுத்துக்காட்டிக் கோரக்ருத்யங்கள் வாயிலாக உலகத்தோருக்கு அருவெருப்பை உண்டாக்கினவெனினும், நாளடைவில் யுத்தங்களுக்குக் காரணமாகி நின்ற ஆசாபாசங்களும், ஆத்ரங்களும், விரோதங்களும் ஆறியடங்கிய பின்னர், இருதிறத்தாரும் தமக்குள்ளிருக்கும் வேற்றுமைகளையொழித்து ஒற்றுமை விஷயங்களைக் கவனித்து ஒன்றுசேர்ந்து, பரஸ்பர அந்யோந்ய போக்குவரவால் ஒருவரிடமிருந்து ஒருவர் புதியபுதிய ஸத்விஷயங்களைக் கற்றுக்கொண்டு உலகநன்மையை அபிவிருத்திசெய்யும் ஆற்றலையுடையனவாயிருக்கின்றன. 'மீடியர்கள்'என்னும் ஜாதியர்கள் க்ரீஸ் நாட்டின் மீது படையெடுத்து தவம்ஸஞ்செய்த காலத்தில் கிரேக்கர்கள் தம்முடைய நாகரிகமும் கல்விகேள்விகளும் இதனுடன் மடிந்து போய்விடுமென்று எவ்வளவோ பயப்பட்டனர். ஆனால் முடிவில் அப்படையெடுப்புக்காரணமாய் கிரேக்க நாகரிகமும்,வித்யா விசாலமும் புதிய துறைகள் நாடிச் சென்று ஒன்றுக்குப் பத்தாகத் தழைத்தோங்கின. அலெக்ஸாந்தர் பஞ்சாபம்து படைத்துவந்து போரஸ் அரசனை முறியடித்ததின் காரணமாக இந்திய சாஸ்திரங்களும் ஸாஹித்யங்களும் மேல் நாட்டாருக்கு எவ்வளவோ பயன்படுவதற்கும் அவகாசம் ஏற்பட்டது. சில துறைகளில் மேல்நாட்டிலிருநது இந்தியர்கள் நூதன விஷயங்கள் கற்றுக்கொள்வதற்கும் அவகாசம் ஏற்பட்டது.இவ்வாறாக ஒவ்வொரு மஹா யுத்தத்தின் சரித்திரங்களையும் தீரத்தெளிய ஆலோசித்துப் பார்ப்போமானால், முடிவில் அவைகள் சிதறிக் கிடக்கும் மானிட ஜாதியர் தத்தம் வேற்றுமைகளை மறந்து ஒன்றுசேர்வதற்குச் காரணபூதமாகின்றன வென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகும். படைமுன்னாலும் அவற்றின் கால்சுவடுகள் மாறுமுன்னர், அவ்வழியே வர்த்தகர் மதபோதனை செய்வோர், சாஸ்திராராய்ச்சிக்காரர்கள், இன்னும் சரித்ரக்காரர்கள், கண்ணுக்குத் தென்படாத இதர தொழிலாளிகள் முதலியோரும் மூட்டைகட்டிக்கொண்டு பிரயாணபடுகிறார்கள். பிரதி நாட்டினரும் நாமடைந்திருக்கும் நாகரிகத்திற்குத் தாமே கர்த்தாக்கள், தமக்கே அவை உரியவை, பிறரால் யாதொரு ஸஹாயமும் உண்டானதில்லை, உண்டாகக்கூடியதுமல்ல என்று நினைப்பது ஸஹஜமாயிருப்பினும் அவ்வித எண்ணம் உண்மைக்கு முற்றும் மாறானது; கேவலம் குழந்தைப் பிராயத்துக்கே பொருந்தியதாகும் அத்தகைய கொள்கை. தம்மூர் ஸர்வோத்தமமான பிரதேசம், தம்மூர் எல்லையைத் தாண்டினால் எல்லாம் காட்டுப்பிரதேசம், அநாகரிகஜாதியார் வசிக்குமிடம்; என்னும் நினைவானது பல நாட்டார்களுக்கும் பொதுவான துர் எண்ணம். இவ்வித தேசாபிமானம் உண்மை தேசாபிமானமாகாது. கேவலம் வெறியனுக்கே அமையும். நாகரிகமென்பது உலகத்தோர் அனைவரும் சேர்ந்து தம்தம்மால் இயன்றமட்டும் ஒற்றுமைத்துப் பொது ஜன லாபத்துக்காகக் கட்டியதொரு பெரிய இல்லத்தை யொக்கும்.

உலகத்தாருக்கு எவ்வளவோ நன்மையை நல்கி சிற்பசஸ்திரத்தில் முதன்மை பெற்றுநின்று, ரூபலாவண்ய சாஸ்திரத்திலும்,புத்திகௌசலத்திலும், தத்வார்த்த வித்தைதளிலும் நமக்கு எவ்வளவோ வழிகாட்டிய க்ரீஸ் நாட்டைக்கவனிப்போம். அந்த க்ரீஸ் நாகரிகத்தால் பயன்படா நாடு இவ்வுலகில் ஒரு நாடு கூடக் கிடையாதெனத் திட்டமாய்க் கூறலாம். அப்பேர்ப்பட்ட க்ரேக்க நாகரிகம் தன்னில் தானே ஸ்வயம்பூவாய் உண்டாய்விட்டதா? அந்நாட்டுச் சாஸ்திர நிபுணர்களே, தாங்கள் பினீஷியர்களிடமிருந்து லிபியையும், எகிப்தியர்களிடமிருந்து தத்வசாஸ்திரங்களையும் பெற்றதாக ஒப்புக் கொள்கிறார்கள். தற்கால சரித்ராசிரியர்கள் அந்தக் கிரேக்க நாகரிகத்துக்கு முதல்காரணமாய் நின்றது ஈஜியன் நாகரிகமென்றும் அந்த ஈஜியன் நாகரிகம் பெரும்பான்மை கீழ் நாட்டாரிடமிருந்து வந்ததென்றும் கண்டறிந்திருக்கிறார்கள். ஜீவ ஜந்துகளில் எவ்வாறு ஒன்றில்லாமல் ஒன்றுண்டாவதில்லையோ அவ்வாறே நாகரிகமும் தற்செயலாய்த் தோன்றுவதில்லை. 'இந்தக் கிரீஸ் தேசத்து உதாரணம் பண்டைக்காலத்து விஷயம். உண்மை யாவருக்குத் தெரியும், எல்லாம் பண்டிதர்கள் சொல்வதைத்தான் நம்பவேண்டியிருக்கிறது'' என்று குறை கூறலாம். இவர் கூறிய தத்வத்துக்குத் தற்கால உதாரணங்கள் எத்தனையோ எடுத்துக் காட்டக்கூடும். அவற்றிலொன்று 'ப்ரெஞ்ச் ஸாஹித்யம்' அவ்விஷயத்தைப் பற்றி யாராயுங்கால் பதினாறும் நூற்றாண்டில் ப்ரெஞ்ச் ஸாஹித்யத்துக்கு மூலாதாரமாய் நின்றவை க்ரேக், லதீன் இப்பாஷைகளிலுள்ள புராதன நூல்கள்; அதற்குச் சிறிது காலத்துக்குப் பின்னால் இத்தாலிய நாகரிகமும், அப்புறம் அதிக ஊக்கத்தையூட்டும் அழகு வாய்ந்த ஸ்பானிஷ் கல்வியும், அடுத்தது ராஸைன் சிறப்பித்த பைபில் நடையும், பதினெட்டாம் நூற்றாண்டில் ஸ்வராஜ்ய முறையின் பிறந்தகமாகிய இங்கிலந்தும், பெரிய 'ரெவல்யூஷன்' அதாவது நேபோலியன் காலத்துக்குப் பின்னால் நவீன் ஜெர்மன் நடையும், கடைசியாக ஸ்காண்டி நேவியா, அல்லது நோர்வே, ஸ்வீடன் தேசத்து நாடக சாஸ்திரமும் ருஷ்ய நாட்டு 'நோவல்' நூல்களுமாக ஒன்றுகூடி தற்காலம் ஸாஹித்ய துறையில் அக்கிராஸனம் பெற்றுத் துலங்கும் ப்ரென்சு கல்வி, ப்ரென்சு நாகரிகம், ப்ரென்சு ஸாஹித்யம் ஜனிக்கலாயிற்று. இல்வாறு சொல்வதால் ப்ரென்சு நாட்டினர்க்கு ஏதாவது கீர்த்தி குறைவா? அவர்களுக்கு ஸ்வயமாய் ஜீவித்திருக்கச் சக்தியில்லையெனக் கருதலாமா? இதர நாகரிகங்களில் நல்லவையாய்த் தோற்றுவனவற்றையெல்லாம் தெரிந்தெடுத்துத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு பிரகாசிக்கும் அரிய ஆற்றலுடைத்து ப்ரென்சுக்காரருடைய நாகரிகமும் கிளர்ச்சியும் என்பது விளங்கவில்லையா! இதரர்களிடமிருந்து அநித்யமானவற்றையும், ஸர்வஜன ஸம்மதமாகாதனவைகளையும் ஒதுக்கி, அவர்களிடமிருந்து நித்யமும், சர்வஜன உபகாரமானதும், பொதுஜன சம்மதமானதுமானவைகளை மாத்திரம் பொறுக்கி

யெடுத்து அவற்றிற்குப் புத்துயிரளித்துப் பூவுலகுக்குப் பயன்படும்படிச் செய்யும் ஆற்றல் சாமாந்ய சக்தியென்று யாவனே கூறுவன்? புதிய ராஜ்யமொன்றை ஸ்தாபிப்பதென்றால் புதிய நாட்டைக் கைப்பற்றித் தம் நாட்டு எல்லையுடன் சேர்த்துக்கொண்டு ஏகசத்திராபதியாய் விளங்குவது கேவலம் நசிக்கும் தன்மையது. அச்சத்ராதிபதியுடனே அல்லது இரண்டொரு தலைமுறையுடனே நசிப்பதாகும். உண்மையில் ஐக்யம் ஏற்பட இடமிராது. இரண்டு நாடுகளுக்கும் பொதுவான எண்ணங்களும் யோசனைகளும், நம்பிக்கைகளும், பரஸ்பரா நுராகமும் ஏற்படுவதே முக்யமான விஷம்.

ஒரு நாட்டினருக்கே உரிய பிரத்யேக ஆற்றலுக்கும் இதர நாடு, இதர நாகரிகங்கள் இவற்றிடமிருந்து கடன்வாங்கப்படும் அம்சங்களுக்கும் தம்முள் சிறிதும் விரோத பாவமென்பதே கிடையாது. மானிட நாகரிகத்து நானாவித அம்சங்களும் சதா ஒன்றுடனொன்று சேர்ந்தும், ஒன்றுக்கொன்று ஸ்தானபேத மடைந்தும் வரும் பண்டமாற்று வ்யவஹாரத்தில், ஒரு நாட்டினர் தம்முடைய பிரத்யேக ஆற்றலைக்கொண்டு தன்னுடைய அனுபவ புத்தியால் இவர் நாகரிகத்தைச்சேர்ந்த அம்சங்களில் எதைத்தான் தம்முடன் ஐக்யப்படுத்திக்கொண்டால் உலகத்தாருக்கு நன்மை பயக்குமோ அதை உட்கொண்டு ஜீரணம் செய்தும், ஒவ்வாததைத், தள்ளியும் நாளடைவில் அபிவிருத்தியடைந்து என்றும் சிரஞ்சீவியாய் இளமைப் பருவத்துடன் ஒளிர்கின்றது. இவ்வாறு அந்நிய அம்சத்தைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வதால் ஸ்வய ரூபத்தில் மாறுதல் ஏற்படுவதில்லை. கிரேக்க தேசம் ரோமன் ஜாதியார் கீழ்ப்பட்டதென்றாலும், ஹாரேஸ் மஹாகவி கூறியவாறு, அபஜயமடைந்த க்ரீஸ் நாளடைவில் தன்னை ஜயங்கொண்டவர்களைத் தன் கீழ்ப்படுத்தியது. ஆனால் க்ரீஸ் அபஜயமடைந்ததுடன் போய்விட்டன, அதன் பிரத்யேகமான ஸ்வயவாழ்வும், ஆற்றலும். எனினும், புதிய குழந்தைகளைப்பெரும் சக்தி ஓய்ந்தாலும், ப்ராணனற்ற அதன் சரீரத்தில் புதிய ஜீவன்களை உற்பத்திசெய்யும் சக்தி மாத்திரம் நசித்துப்போகவில்லை. பல நூற்றாண்டுகள் ஒளி மங்கிப்போயிருந்து, பின்னர் மேனாட்டுக் கிறிஸ்தவநாகரிகம் தலையெடுக்குங்காலத்தில், க்ரீஸ் தேசம் அக்கிறிஸ்தவ நாகரிகத்துக்குப் புத்துயிரளித்து அதன் தன்மையை மாற்றுவதற்குக் காரணமாய் நின்றது.

(இன்னும் வரும்)

---

## ஓர் ஸம்பாஷணை.

(ஓர் B.A., B.L., எழுதியது)

களம்—ஓர் அந்தணன் வீட்டுத் தெருத்திண்ணை.
காலம்—மாலை.

ராமய்யர்—சுப்பய்யரே! நமஸ்காரம் வாருங்கள். எங்கே இரண்டு நாளாகக் காணோம்? போதே போகவில்லை!

சுப்பய்யர்—நமோநம:! நான் ஊரிலில்லை. அகரத்துக்குப் போயிருந்தேன். காலையில்தான் வந்தேன்.

ராம—சரி உட்காருங்கள். எல்லாரும் ஸௌக்கியந்தானே?

சுப்—எல்லாம் க்ஷேமந்தான். அங்கே ஒரு விஷயம் கேழ்விப்பட்டேன். அதைப்பற்றி உங்களைக் கேட்டால் தெரியுமே என்றுதான் வந்தேன்.

ராம—ஆனால் சீட்டாட வரவில்லையோ?—என்ன சங்கதி? சொல்லுங்கள்.

சுப்—ஏதோ, சர்க்கார் பணமாம்; சுவல்ப வட்டிக்குக் கடன் கொடுக்கிறதாம்; சிறுகச் சிறுகத் திரும்பி வாங்குகிறதாம்; அதற்கென்னவோ சங்கமாம். என்னவெல்லாமோ அவ்வூரில் நடக்கிறதாமே?

ராம—அதா! ஐக்கிய சங்கத்தைச் சொல்லுகிறீர்களா? அகரத்திலேயும் ஒன்று இருக்கிறதா?

சுப்—ஆமாம். எங்கள் மாப்பிள்ளைதான் அதை நடத்துகிறாராம். அவர்தான் என்னமோ—அக்கிராசனாதிபதியாம்.

ராம—அப்படியா? உங்கள் மாப்பிள்ளைக்கு அடிக்கடி செலவுக்குப் பணம் வேண்டியிருக்கும் போலிருக்கிறது! ஏதாவது வம்பிலே மாட்டிக்கொண்டு, பொதுப் பணத்தைக் கையாண்ட குற்றத்திற்காக, அகப்பட்டுக் கொள்ளப் போகிறார்!

சுப்—என்னையா? பயமுறுத்துகிறீர்களே? ஏழைகளுக்கு வெகு சகாயமாம். பரோபகாரத்துக்காகப் பாடுபடுகிறாராம். நீங்கள் என்னமோ, பின்னால், கோர்ட்டுக்குக் கொண்டுவந்து விட்டீர்களே!

ராம—பயமென்ன? ஒழுங்காய் நடத்தினால், எல்லாம் உண்டு. தவறினால் தலைக்குத்தான் தீம்பு.

சுப—அவ்வளவு பரோபகாரமான விஷயத்தில், எப்படித் தீம்புவரும்? சொல்லுங்கள்.

ராம—பணத்து விஷயம் தெரியுமா? பத்திரம்! வாயிதா பணத்தைக் கையாண்டு, கிராம மணியக்காரன் திண்டாடுவதைப் பார்த்ததில்லையா? அம் மாதிரிதான்!

சுப்—அதற்காகவா? அதிலே எங்கள் மாப்பிள்ளை அதிக கவனம். ஒரு நாள் அவர் அகத்தில்லாத ஸமயத்தில், எங்கள் சுந்தரம் அரையணா எடுத்து அவரைக்காய் வாங்கிவிட்டாள். அதற்கு அவர் அதட்டி, அமுலெல்லாம் பண்ணிவிட்டார். அதிருக்கட்டும். நம்மூரிலே அந்தமாதிரி ஒரு சங்கம் வைத்தாலென்ன?

ராம—போதும். அதை யார் ஐயா கட்டிக்கொண்டு திண்டாடுகிறது? இதற்காகவா ஆரம்பித்தீர்கள்? நிறுத்துங்கள்!

சுப்—அதென்ன அவ்வளவு கஷ்டமா? சொல்லுங்கள், பார்ப்போம்.

ராம—முதலில், ஐக்கிய சங்கமென்றால், ஊரில் ஐக்கியம் வேண்டும். இருவர் ஒத்து வாழாத இவ்வூரில், எப்படி ஐக்கிய சங்கம் நடைபெறும்?

சுப்—ஆனால், நம்மூரில் ஐக்கியமேயில்லை யென்று சொல்லுகிறீர்கள்?

ராமா—அதற்கென்ன, வேண்டியதுண்டு! ஒருவன் மேலொருவனைத் தூண்டி, வியவகாரந்தொடுத்துக், கோர்ட்டுக்கு அனுப்பிப், பிறகு சாக்ஷிக்குப் போவதிலும், செட்டிக்கடையில் ஜாமீன் கையெழுத்துப் போடுவதிலும், ஊரில் கக்ஷிப்பிரதிகக்ஷி பண்ணுவதிலும், ஐக்கியத்துக்குக் குறைவேயில்லை.

சுப்—அப்படிப் போகிறவர்கள் போகட்டும் நீங்கள் தான் ஒன்றிலும் தலையிட்டுக் கொள்வதில்லையே. நீங்களாவது ஒரு சங்கம் வைத்து நடத்தக் கூடாதா?

ராம—ஆகா! அடி மடியில் கைபோட வந்தீர்களா? நானா? இன்னும் யாராவது நடத்தினாலும், கிட்டவே போகமாட்டேன்.

சுப்—ஏன் ஐயா? அதென்ன? பாம்பா? தேளா?

ராம—ஓகோ! அவற்றிற்கெல்லாம் தேலே,—தெரியுமா? ஐக்கிய சங்கமா? எல்லாருடைய "சிண்டு"களையும் சேர்த்து முடிபோடுகிற சங்க

ங்காணும்! அதினால்தான் ஐக்கிய சங்கமென்று பெயர்!

சுப்—அதென்ன! அவ்வளவு பொல்லாததா? இருக்கட்டும். இவை யெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியும்?

ராம—எனக்கு பத்துவருஷமாகத் தெரியும். எங்களுடைய மாப்பிள்ளை ஒரு பெரிய சங்கத்தை நடத்துகிறார். என்னையும் இவ்வூரில் ஒரு சங்கத்தை நடத்தும்படி வெகுநாளாகத் தொந்தரவு பண்ணினார். அவரிடம் போனால், அவர் வேறுபேச்சுப் பேசுவதில்லை. சொந்தகாரியத்தைக்கூட கவனிப்பதில்லை. எல்லா கதையையும் திருப்பித்திருப்பி அவரிடம் கேட்டாயிற்று. ஆபத்தென்று தான் அதிலே நான் பிரவேசிக்கவேயில்லை. அதைப்பற்றிப் பேசுவது கூட இல்லை. இன்று நீங்கள் கிளறி விட்டீர்கள்.

சுப்—அப்படியா, என்ன? உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் சொல்லுங்கள். நான் ஏதோ கேட்டவரையில் அது நன்மையைத்தருமென்று நினைத்தேன். அவ்வளவு கெடுதலா? எப்படி? சொல்லுங்கள்.

ராம—ஏதையா? விடமாட்டீர்களோ?

சுப்—இல்லை. கேட்டுத்தானே தெரிந்து கொள்ளவேணும். தயவுசெய்து சொல்லுங்கள்.

ராம—போதும். இதோடு நிறுத்துங்கள். இதுவரையில் சீட்டாடியிருந்தால் ஒரு "இஸ்பேட்டா"வது தரிசனமாகி யிருக்கும். வாருங்கள், சீட்டைக் கலைத்துப் போடுகிறேன். கொஞ்சம் பொடி கொடுங்கள்.

சுப்—பட்டிணம் பொடி- பாருங்கள்.—நாளைக்காவது சொல்லுகிறீர்களோ? கட்டாயம் சொல்லவேணும்.

ராம—ஆகட்டுமைய்யா! இல்லா விட்டால் சீட்டாடவரமாட்டீர்கள். நாளைக்குச் சொல்லுகிறேன்.

(இன்னும் வரும்)

---

## இந்திர கோபம்

[Rights of Translation Strictly Reserved]

நேற்று ஞாயிற்றுக்கிழமைதினம், மேல் வீதியில் வடக்குக்கோடியிலுள்ள இராஜா சத்திரத்தில், ஸ்வாமி கருணானந்தர் உபன்னியாசம் செய்யப்போவதாய்க் கேள்விப்பட்டு அங்கு சென்றேன். சத்திரத்தின் உள்புறத்தில், கூட்டமாய் எல்லா வருணத்தவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களின் நடுவில், கருணைபொழிகின்ற கண்களும், மலர்ந்த முகமும் விளங்க, புன்னகையோடு, ஸந்யாஸி ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். அதாவது,

கருணானந்தர்—"சிறிது காலத்திற்குமுன், இங்கு வந்திருந்தபொழுது, யாக யஞ்ஞங்கள் செய்வது ஜீவஹிம்சையை உண்டுபண்ணுவதல்லாது, நமது சுகத்திற்கு ஹேதுவாகாதென்றும், இந்திரனுக்கு விழா நடத்துதல் அறிவுடையவர்களுக்கு அழகல்லவென்றும், நம்மைப்போல சுகதுக்கங்களால் அலைப்புண்டு அவஸ்தைப்படும் தேவர்களைப்பூஜித்து நம் பிறவித்துயரை பிகற்ற நினைப்பது, குருடனைக்கொண்டு கண் வைத்தியம் செய்துகொள்வது போல் ஆகுமென்றும் சொன்னேன். அதைக்கேட்டு நீங்களும், அவ்வாறே, இந்திர விழாவைக் கொண்டாடாமல் நிறுத்திவிட்டீர்கள். யாகாதிகளையும் பூஜைகளையும் ஒருவாறு குறைத்துவிட்டதாகவும் தெரியவருகின்றது. இவைகளையுணர்ந்த சுவேதாரண்ய தீக்ஷிதர் தனது தொழிலுக்கு அபாயம் நேரிட்டதாக நினைத்து, வெகு கோபங்கொண்டு, உங்களை பயமுறுத்தினதாக அறிந்தேன். அவர், நீங்கள் அறிவுடையோர் செயலைக் கைப்பற்றி யொழுகுவதால், தேவர்கள் கோபங்கொண்டு, வெறுப்படைந்து, உங்களை அநேகவிதமாய் உபத்திரவிப்பார்களென்றும், மேலும் அவர்களுக்குரிய ஹவிற்பாகங்களைக் கொடாவிட்டால், நமது வாழ்விற்கெல்லாம் மூலமாயிருக்கும் மழையை நிறுத்திவிடுவதல்லாது, மற்றுமுள்ள இயமன், அக்னி, வருணன் முதலிய தேவர்களது கோபத்திற்குட்படவேண்டியிருக்குமென்றும் சொன்னதாகச் செவியுற்றேன். அவ்வாறு அவர் கூறியது, உங்களுடைய அறிவின் திறமையை அவர் கவனிக்காத தன்மையை உணர்த்துவதல்லாது, அவரது புத்திநுட்பத்தைக் காட்டவில்லை. அவர் கூறியதெல்லாம் பிசகென்பதும், ஆத்மாவின் மகிமையையும் பெருமையையும் அறிந்த நாம் முற்றும் நம்பக்கூடியதாய் இல்லையென்றும், உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் ஆசைகொண்ட நமக்கு தேவர்களாலும் பயமுண்டோ?

துறக்கமே முதலான எவையும் அழியும் தன்மையவென்றும், அவைகளில் இச்சைவைப்பது பிறவிக்கடலில் நம்மை ஆழ்த்துவதல்லாது கரையேற்ற மாட்டாவென்றும் நன்குணர்ந்த நமக்கு தேவர்கள் கொடுக்கும் இன்பமும் துன்பமும் உண்டோ?

தீக்ஷிதர் அவர்கள் நமது மனோபாவத்தை நோக்காது, தனக்கும் தன்னினத்தவருக்கும் தக்ஷிணையிலுள்ள ஆசைப்பெருக்கால் இவ்வாறு கூறினரே யொழிய, அவர் இதில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவரென்று நான் எண்ணமுடியவில்லை. ஆகவே நீங்கள் அவர் சொல்லும் விஷயங்களைக் கேட்டு மயங்கவேண்டாம். ஞானமென்னும் வாளையே துணையாகக்கொண்டு, ஆத்ம சுகத்தை அடைய எத்தனிக்கும் நம்மைத்தடுக்க, தேவர்களாலன்றி, மற்றைய யாவராலும் முடியாது,"

என்று சொல்லி நிறுத்தியவுடன், அக்கூட்டத்திலிருந்த வினயசாந்தர் என்னும் பட்டப்பெயர் கொண்ட, வல்லப சாஸ்திரிகள் எழுந்து, மேலிருந்த சால்வையைக் கொஞ்சம் தள்ளிக்கொண்டு, காதிலுள்ள குண்டலத்தை யசக்கி, மிருதுவாய்ப் பேச ஆரம்பித்தார்.

வல்லபர்—"அறிவிற் சிறந்த அன்பர்காள்! இப்பொழுது ஸ்வாமிகருணானந்தர் கூறியமொழிகளைக் கேட்டு, மன்ம்வருந்துகின்றது. அவர் பெயருக்கு முற்றும் மாறாக, உங்களிடத்தில் கருணையை யொழித்து, உங்களை இந்திரனுடைய கோபத்திற்கும், இமையவரது சீற்றத்திற்கும ஆட்படுத்துவதைக் கண்டு வருந்துகிறேன். ஏதோ தேவர்கள் நாம் கொடுக்கும் ஹவிற்பாகங்களை விரும்புவதாகவும், தீக்ஷிதர் தக்ஷிணையில் ஆசைகொண்டவரென்றும் அவர் சொல்வது சரியன்று. தேவர்களுக்கு நம்மால் ஆவது ஒன்றுமில்லை. அவர்களால் நாம் இம்மையிலடைந்த பெரும்பயனுக்கும், மறுமையில் அடையப்போகிற இன்பங்களுக்கும் கைம்மாறாக நாம் அவர்களுக்கு இயற்றும் பூஜை முதலியவைகள் நம்முடைய கிருதஞ்ஞதையைக் காட்டுவதல்லாது, வேறுண்டோ? செய்நன்றி கொன்றவர்களுக்கு விமோசனமுண்டோ? தீக்ஷிதர்கூறியது இதுவேயன்றோ? தேவர்களை யிகழ்ந்து, அவர்களுடைய விழாக்களைக் கொண்டாடாது இருப்பதினால், நம்மை நன்றியறிவில்லாதவர்களென உலகில் பிரசித்தப்படுத்திக் கொள்வதல்லாது, வேறு பலனுண்டோ? இதுவரையிலும் நாமும் வேறு

தேவர்களைப் பூஜித்து, அவர்களுடைய அருளினால், இம்மை மறுமை சுகங்கள் அடைந்தோம். இப்போது, ஏதோ மோக்ஷமென்ற அநிர்வசனீயமான ஸ்திதியை அடையவேண்டி, துராசைகொண்டு, இவ்வின்பங்களை யிகழ்வது அறிவிற்கு அழகாகுமோ, —— கவனியுங்கள்! பிரத்தியக்ஷமாயிருக்கும் சுகத்தை இகழ்ந்து தள்ளி, அப்பிரத்தியக்ஷமாயும், இன்னதென்று சொல்லமுடியாததொன்றை நாடித்திரிவது, மதியுள்ள மாந்தர்கள் செய்யத்தக்கதா?——யோசியுங்கள். தேவர்களது வல்லமையைப்பற்றி தீக்ஷிதர் சொன்னதெல்லாம் நம்மை நன்னெறியில் உய்ப்பதின் பொருட்டேயன்றி, தேவர்கள் அவ்வல்லமையால் நிஜமாகவே நம்மைக்கெடுக்கும் எண்ணம் உள்ளவர்களென்பது அன்று. அவர்களுக்கு நம்மிடம் உள்ள அன்பு என்றைக்கும் மாறாதது. கருணானந்தர் உங்களிடத்தில் கருணையில்லாமற் சொன்ன வாசகங்களை கவனியாமல். எப்பொழுதும்போல், மாந்தர்களின் இயல்பை அநுஸரித்து, தேவர்களை ஸம்மானித்து, பேரின்பமடையவேண்டுமே ஒழிய, வேறு மார்க்கம் கிடையாது. இதுநிற்க. மோக்ஷ இச்சையுடைய உங்களுக்கு சித்தசுத்தி, அவசியமென்பதைக்கூடக் கருணானந்தர் தள்ளிவிடுவாரா? அச்சித்தசுத்தி, ஸத்கர்மங்களாலும், தேவர்களுடைய அருளாலுமன்றிக் கிடைக்கும் வழி உளதோ? கருணானந்தர் பேச்சைக்கேட்டும், சுவேதாரண்யதீக்ஷிதர் உபதேசத்தைத் தள்ளவேண்டாம். தள்ளினால், அதிகக்கேடுகள் உண்டாகுமென்பது நான் சொல்லாமலே தெரியவரும். நமக்கு எல்லா இன்பங்களையும் தரவல்லதெய்வங்களை யிகழ்வதும் நீதியா? அது நியாயமா?”

என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஸபை நடுவிலிருந்த, ஹாலாஸ்யர் என்னும் ‘குருக்கள்,’ திடுக்கென்று எழுந்து, கைகளைக்கோத்துத் தலையின்மீது நீட்டி, உடலைவளைத்துக் கண்களைமூடிப் பற்களைக்கடித்து, ஹா ஹா வென்று கூச்சலிட்டு, இடியிடித்ததுபோல் பேசத்தொடங்கினார்.

ஹாலாஸ்யர் “இந்திர கோபம் பொல்லாது! சந்நியாசி ஜபமெல்லாம் செல்லாது! துஷ்டர்கள் பேச்சைக்கேட்டுக் கெடவேண்டாம்! இமையவரே சீற்றங்கொண்டால், அதை ஆற்றும் வகையுண்டோ? கேளுங்கள்! விழாவை நடத்துங்கள், யாகங்களை இயற்றுங்கள். இல்லாவிட்டால் வானம் வறண்டு, மண்ணும் நீருலர்ந்து, உண்ணும் நீர் கிடைக்காது உழலுவீர்கள். ஜாக்கிரதையாய்ப் பிழையுங்கள், சொன்னேன்! சொன்னேன்!”

என்றவுடன் கீழே விழுந்தார். அங்கிருந்தவர்களில் சிலர் எழுந்து, அவனடி பணிந்து, கற்பூரம் ஏற்றிக் காட்டி, “தேவ தேவனே! மன்னிக்கவேண்டும். எங்கள் மேற் கிருபை கூர்ந்து, சீற்ற மொழிக்கவேண்டும்,” என முறையிட்டார்கள். ஹாலாஸ்யரும் கண்களை மெதுவாய்த் திறந்து, சுற்றி நிற்பவர்களை நோக்கி, “என்ன சமாசாரம்? ஏன் இவ்வாறு கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறீர்கள்? எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்,” என, அவர்களும் நடந்த செய்தியைத் தெரியப்படுத்த, “எனக்கொன்றும் தெரியவில்லையே! இதென்ன ஆச்சரியம்! இப்படியுமுண்டா? தேவர்கள் செயல் யார் அறியமுடியும்? அவர்களுக்கு நம்மிடத்திலுள்ள அன்பு மிகுதியால்தான் இவ்வாறு நடந்திருக்கும்,” என்றார்.

இஃது இவ்வாறிருக்கையில், கருணானந்தர் அங்கிருந்த மற்றைய மாந்தர்களைப் பார்த்துப் புன்னகை செய்து, இனிய குரலோடு பேச ஆரம்பித்தார். உடனே, எல்லோரும் ஹாலாஸ்யரை விட்டுவிட்டு, அவர் சொல்வதைக் கவனித்தார்கள்.

கருணானந்தர்—“ஞானத்திற் சிறந்த தீரர்காள்! இப்போது, தனது பட்டப்பெயருக் கிணங்க, மிக்க விநயத்தோடு, வல்லப சாஸ்திரிகள் சொன்னதையும், குரூரமாய் ஹாலாஸ்ய குருக்கள் அபிநயங்காட்டி விளம்பியதையும் கேட்ட எனக்கு அடங்காத நகை யுண்டாகின்றது. அவர்கள் உங்களுக்கு இப்பொழுது உண்டாயிருக்கும் ஞானபலத்தைச் சிறிதும் உணரவில்லை; முன்போலவே, இன்னமும் சுவர்க்க இச்சை கொண்டவர்களென்றே நினைத்தார்கள். அதிருக்கட்டும். தேவர்கள் ஸர்வசக்திவாய்ந்தவர்களென்றும், மேலும் அவர்கள் பகை கூடாதென்றும் சொன்னார்களே. அத்தேவர்கள் அஸுரர்களுடைய உபத்திரவத்தை நீக்கப் பூவுலகிலுள்ள அரசரின் உதவியை வேண்டுவது ஏனோ? அது அவர்கள் சக்தி யின்மையைக் காட்டவில்லையா?

இது நிற்க. சுவர்க்க போகங்களை யனுபவித்துக் களிக்கும் தேவர்கள், அல்ப சுகங்களை அநுபவித்துவரும் மாந்தர்களால் அளிக்கப்பட்ட ஹவிற்பாகங்களுக்கு ஆவல் கொள்ளுவதும் நியாயமா? இவைகளைச் சற்று யோசிக்குமளவில், சாஸ்திரிகள் சொல்லிய மொழிகள் பயனிலவென நன்றாய் விளங்கும். அவர் நாம் நன்றியறிவைக்காட்டவேண்டுமென்றார். நன்மைக்கு நன்றியறிவானால், தேவர்களால் வரும் இடைஞ்சல்களுக்கு என்ன செய்யவேண்டும்? ஆதிகாலம் முதல் ஞானம் பெறுவதற்காகத் தவம் முயல்வோருக்கெல்லாம் இடையூறுகள் இயற்றுவது தேவரது தொழிலன்றோ? விசுவாமித்திரர் தேவரால் அடைந்த துன்பம் விளம்பவும் வேண்டுமோ? தேவர்கள் நம்மைப்பார்க்கிலும் வன்மை உடையவர்களென்றே வைத்துக் கொள்வோம். தேகமே ஆத்மாவென எண்ணியவருக்கல்லவா அத்தேவர்களிடத்தில் பயமுண்டு? ஆத்மா நித்திய ஸ்வதந்திரன் என்றறிந்த தீரர்களுக்கும் தேவதேவர்களிடத்தில் பயமுண்டோ? கற்பக விருஷம, காமதேனு முதலியவற்றை அடைந்தும், நாம் எரியில் விடும் நெய்க்கும் உணவுக்கும் பறந்தோடிவரும் தேவர்களோ நமது மோக்ஷமார்க்கத்திற்குத் துணையாவார்கள்? அவர்களைக் கைப்பற்றிக் கரையேற நினைப்பது, கருத்திலான் கண்ணிலான் கையைக்கொண்டு சித்திரமெழுத எத்தனித்ததுபோல் ஆகும். மயங்காதீர்; கலங்காதீர்; மோக்ஷத்தில் லக்ஷ்யத்தை விடாதீர்கள்,” என்று நிறுத்தினார். ஸபை கலைந்தது. நானும் வீடடைந்தேன்.

—“ராமசந்திரர்”

---

## புயற்காற்று

(அந்ததபாயு பிரம்மஸமாஜத்தைச் சார்ந்த ஒருவர்? ஹேமநளினி அவர் மகள். இராமேசனைக் காதலிப்பவள். இராமேசன் ஒரு ஹிந்துவாலிபன்; அந்ததபாபுவின் மான்;” யோகனுடைய தோழன்; ஹேமநளினியின் காதலன். அக்ஷயன். ஹேமநளினியை மணக்க விரும்பும் வாலிபன், ஆகையால் இராமேசனுடைய விரோதி.

கமலர்- இராமேசன் தான் முகமெடுத்துப்பார்க்காத புது மனைவியுடன் கல்யாணமானதும் ஊருக்குப் படகுகளில் வரும்போது புயற்காற்றால் படகுகள் கவிழவே, தன்னைப்போலவே தப்பிப்பிழைத்த இவளை முதலில் தன் மனைவியென்று நினைத்தும் பிறகு இவள் வேறு என்று உணர்ந்தும் இவளிடம் தெரிவிக்கத்தைரியமின்றி இவளைப் பெண்பள்ளிக்கூடத்தில் விட்டிருந்

தான். இவள் உண்மையை உணராமல் இராமேசனைத் தன் கணவனென்று நினைத்திருந்தாள்)

## அதிகாரம் 12.

அக்ஷயன் கேட்ட மருந்தைக்கொடுத்துஉடனே அனுப்பிவிட அந்நதபாபுவுக்கு இஷ்டமில்லை; அக்ஷயனும் புறப்பட்டுபோக அவசரப்படவில்லை. தன் கடைக்கண்ணால் இராரமசன் அடிக்கடி எச்சரிக்கை செய்து கொண்டிருந்தான்; ஆனால் இராமேசன் எதையும் அவ்வளவு கவனிப்பதில்லை. என்றாலும், தன்னுடைய நடத்தையில் வெறுப்புடன் அக்ஷயன் தன்னை எச்சரிக்கை செய்கிறான் என்பதை அவன் கவனியாதிருக்க முடியவில்லை. அவனுடைய பார்வை இராமேசனுடைய மன அமைதியைக் கெடுத்தது.

ஜப்பல்பூருக்குப்போகிற பயணத்தைப்பற்றி நினைத்து நினைத்து களிப்புற்றிருந்தான். ஹேமநளினி புறப்படுங்காலமும் நெருங்கிவிட்டது. இராமேசன் அடுத்த தடவை தன் வீட்டுக்கு வந்தவுடன் தான் விடுமுறை நாட்களில் என்னென்ன விதம் பொழுது போக்குவது என்று இராமேசனுடன் கலந்து பேசித் தீர்மானிக்கவேண்டுமென்றிருந்தாள். அங்கே ஒழிந்த வேளைகளில் வாசிப்பதற்காக எடுத்துக்கொண்டு போக வேண்டிய புஸ்தகங்களின் ஜாபிதாவை அவனுடன் பேசி தீர்மானிக்கவேண்டுமே. அக்ஷயனாவது வேறுயாராவது "டீவேளையில் வருவார்கள். அதற்குமுன் இருவரும் தனித்திருந்து ஆலோசனைகள் செய்ய வேண்டும் என்றும் அதற்காக இராமேசன் வழக்கத்தை விட அதிசீக்கிரமாகவே வரவேண்டும் என்றும் தீர்மானித்திருந்தும் அன்று இராமேசன் வருவதற்குத் தாமதமாய் விட்டது. வந்தபோதும் இராமேசன் உற்சாமற்று ஏதோ ஆலோசனை செய்பவன்போல் காணப்பட்டான். அதைக்கண்டதும் ஹேமநளினிக்கும் ஊக்கம் மட்டுப்பட்டது.

இராமேசன் காதில் மட்டும் விழும்படியாய்த் தாழ்ந்தகுரலில் "இன்று இங்கே வரத்தாமதமாய் விட்டதே" "என்றாள் ஹேமநளினி. இராமேசன் மனதுவேறு எங்கேயோ போயிருந்ததுபோலும்.

"ஆமாம்" என்று சொல்வதற்குக் கூட சற்று நேரமாயிற்று. அந்தவேளையில் தாமதியாமல் காரியங்களைச் சரிவரச் செய்யவேண்டுமென்பது ஹேநளினியின் கொள்கை, அதற்கேற்ப பிற்பகலில் தலையைவாரி முடிந்து நல்லாடை உடுத்து 'டீ'வேளையை எதிர்ப்பார்த்துப் கடிகாரத்தின் மேலேயே கண்ணைக் காத்திருந்தாள் இராமேசன் வருவான் என்று. ஒருவேளை இராமேசனின் கடிகாரம் மெள்ளப் போகிறது போலும்; அதனாலே தான் அவன் இன்னும் வரவில்லை என்று வெகு நேரம்தன்னையே தேற்றிக்கொண்டு எந்த நிமிஷமும் எதிர்பார்த்திருந்தாஉ கடிகாரத்தின் பிச்காய் இருக்காது என்று தீர்மானிக்க வேண்டி வந்ததும் அவள் தையல் வேலை செய்து கொண்டிருக்கலாம் என்று ஊசியையும் நூலையும் எடுததுக் கொண்டு ஜன்னல் புறத்தில் உட்கார்ந்து தன்னுடைய ஆவலை ஒருவாறு அடக்கிக்கொண்டு இருந்தாள் இப்படிக் கெல்லாம் ஆனபின் கடைசியில் இராமேசன் வந்தும இவ்விதமாய் மெய் மறந்தவன் போல் தன்னைகவனியாமலும் தாமதித்து வந்த பிறகும் தன்னிடம் காரணங்காட்டி மன்னிப்புக் கேளாமலும் இருந்தான் னென்பது அவள் மனதைப் புண்படுத்தியது.

வழக்கமாய் வருவதைவிட சீக்கிரமாகவே வருவதாய் சொன்ன பேச்சை முற்றும் மறந்துவிட்டானே இராமேசன்.

அன்று "டீ" வேளை ஹேமநளினி, சகிக்க முடியாதோர் பெரிய சங்கடமாக விருந்தது. அது ஒருவாறு முடிவடைந்ததும் இராமேசன் மனம் மழுங்கி இருப்பதைக் கண்டு அவனைத் தூண்டி உத்சாகப்படுத்த பிரயத்தனப்பட்டாள் ஹேமநளினி. அங்கே சுவரோரமாய் ஒரு மேஜை மேல் சாற்றிவைக்கப்பட்ட புஸ்தகங்களையெல்லாம் எடுத்தாள். அவள் அப்படி புஸ்தகங்களை எடுத்ததைக் கண்டதும் இராமேசன் திடீரென விழித்தெழுந்தவன்போல் அந்த நிமிஷமே அவளருகில் சென்று "இவைகளை எங்கே எடுததுக் கொண்டு போகிறாய்?" என்றான். இன்றுதானே நாம் கூட எடுத்துக்கொண்டுபோக வேண்டிய புஸ்தகங்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும் எனறது"

ஹேமநளினியின் வாய் இதழ்கள் துடித்தன. அவள் கண்களில் ததும்பிய துக்கத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

"இனிமேல் எப்படி பொறுக்குவது; ஆனாலும் பாதகமில்லை" என்று சொல்லிக்கொண்டே மாடிக்கு விரைந்தேறி புஸ்தகங்களைத் தன் படுக்கையறையின் மூலை யொன்றில் வீசி எறிந்தாள்.

அவள் அப்படி விரைந்தோடினது இராமேசனுடைய மனவருத்தத்தை அதிகரித்தது.

"உமக்கு என்ன உடம்பு, இராமேசபாபு, சரியாக இல்லைப்போல் தோன்றிகிறதே" என்றான் அக்ஷயன். ஆனால் அவனுக்கு உள்ளுக்குள் சந்தோஷம்.

இராமேசன் ஏதோ பதில் முணு முணுத்தான். ஆனால் இராமேசனுடைய தேகஸ்திதியைப்பற்றி அக்ஷயன் கூறியது மட்டும் அந்நதபாபுவின் காதில் பட்டதால் அவர்,

"ஆமாம், அவனைக்கண்டதும்" எனக்குக்கூட அப்படித்தான் தோன்றிற்று என்றார்.

அதற்கு, அக்ஷயன், நாத்துடிப்பாய் "இராமேசபாபு போன்ற சிலர் தங்கள் தேகஸ்திதியைப்பற்றி நினைப்பதுகூட மரியாதைக் குறைவு என்று கருதுகிறார்கள். மனோராஜ்ஜியத்திலேயே குடியிருப்பவர்களாய் வயிறு வலித்தாலுங்கூட அதற்குக் காரணம் என்ன என்று கவனிப்பது தங்கள் அந்தஸ்துக்குக் குறைவு என்று எண்ணுகிறார்கள்

உடனே தத்துவ சாஸ்திரிகளுக்கும் பிறருக்குப் போலவே ஆகாரம் சரிவர ஜீரணம் ஆவது எவ்வளவு அவசியம் என்பதைப் பிரமாதமாம் எடுத்துப் பேச ஆரம்பித்துவிட்டார். அந்நத பாபு இவர்கள் இருவர் மத்தியில் ஹிம்ஸையை பொறுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் இராமேசன்.

கடைசியில் அக்ஷயன் பேச்சை ஒருவாறு முடிப்பவனாய் "இராமேசபாபு நான் சொல்வதைக் கேளும். அந்நதபாபுவின் மாத்திரைகளில் ஒன்றை வாங்கிச் சாப்பிட்டுவுட்டு சீக்கிரமாப்ப் போய்ப் படுத்துக்கொள்ளும்." என்றான்.

"அந்நத பாபுவிடம் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்காகக்காத்துக்கொண்டிருக்கிறேன்." என்று இராமேசன் துடுக்காய்ப் பதில்ச்சொல்லவே, அக்ஷயன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தான்.

"ஓகோ, அப்படியா? அதை முன்னாலேயே சொல்லக்கூடாதா? இப்படித்தான் இராமேசபாபு ஊமைபோல் சும்மா வெகு நேரம் உட்கார்ந்திருப்பது, கடைசியில் வேளை தப்பியபின் திடீரென ஆரம்பிப்பது." என்று சொல்லிக்கொண்டே அந்நத பாபுவினிடம் விடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்றபின் தன்னுடைய கால் கட்டைவிரலைப் பார்த்துக்கொண்டே இராமேசன் "அந்நத பாபு, உங்கள் வீட்டுக்குழந்தையைப்போல் நீங்கள் பாராட்டும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்ததே, அதனால் என் மனது அடைந்திருக்கும்——"

"இதென்ன, எங்கள் யோகனுடைய நண்பன் நீ; உன்னை அவனுடன் பிறந்தவன்போல் பாராட்டுவது ஒரு புதுமையோ?"

ஆடத்துவக்கின தாசிக்கு அடுத்த அடி மறந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது இராமேசனுக்கு.

அவனுக்கு வழி காட்டுபவர்போல் அந்நத பாபு "வாஸ்தவத்தில் நாங்கள் அல்லவா கொடுத்து வைத்து இருக்கவேண்டும், உன்னை எங்கள் வீட்டுப்பிள்ளையாய் அடைய."

ஆனால் இதுகூட இராமேசனுக்கு வழிகாட்டாதிருக்கவே அந்நத பாபு மறுபடியும் "ஊராரெல்லாம் ஹேமநளினியையும் உன்னையும் பற்றிப்பேசுகிறார்கள். கல்யாண வயது வந்தபின் அவள் போன்ற பெண்கள் யாரோடு பழகுவது என்கிற விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் என்கிறார்கள். ஆனால் நான் அவர்களுக்குச் சொல்வேன், "எனக்கு இராமேசனிடத்தில் முழு நம்பிக்கை அவன் நம்மைக் கைவிடமாட்டான்" என்று.

இராமேசன்: "அந்நத பாபு, உமக்கே என்னைப்பற்றியெல்லாம் தெரியும்; நான் ஹேமநளினிக்குச்சரியான கணவன் என்று நினைத்தீரானால்——"

அந்நத பாபு: "சரி, சரி. நான் அப்போதே நிச்சயம் பண்ணிவிட்டேன். உனக்கு இன்னும் துக்கம் ஆறி இராது என்றுதான் நான் இதுவரை உன்னைக் கேட்கவில்லை; இனி தள்ளிக்கொண்டே போவதில் என்ன பிரயோஜனம்? ஊரார் என்னென்னவோ பேசிக்கொள்ளுகிறார்கள். அதை நிறுத்திவிடவேண்டும் அல்லவா?"

இராமேசன்: "தங்களிஷ்டமெப்படியோ அப்படியே; எல்லாவற்றிற்கும் தங்களுடைய மகளையும் கேட்டுக்கொள்ள வேண்டாமா?"

அந்நத பாபு "ஆம், ஆம். ஆனால் அவளுடைய இஷ்டம் இன்னதென்று எனக்கும் கொஞ்சம் தெரியும். ஆயினும் எதற்கும் எல்லாவற்றைப்பற்றியும் நாளைக்காலையில் பேசித் தீர்மானிப்போம்."

இராமேசன்: "உம்மை இவ்வளவுநேரம் இங்கே நிறுத்திவிட்டேன்; நாழிகையாகிறது நான் போய்வரலாமா?"

அந்நத பாபு "இந்தா! ஒரு வார்த்தை. நாமெல்லோரும் ஜப்பல்பூருக்குப் புறப்படுமுன்னமேயே கல்யாணத்தைத் நடத்திவிட்டால்த்தானே நன்றாயிருக்கும்."

இராமேசன் "அவ்வளவு சீக்கிரமாகவா?".

அந்நத பாபு "இன்னும் பத்து நாளிருக்கிறதே புறப்படுவதற்கு. அடுத்த ஞாயிற்றுக்கிழமை கல்யாணத்தை நடத்திவிட்டால், அப்புறம் இரண்டு மூன்று நாட்கள் இருக்கின்றனவே புறப்படுவதற்கு. இல்லை, இராமேசா, உன்னை அவசரப்படுத்தவேண்டுமென்று இல்லை. ஆனால் என் தேக சௌக்கரியத்தை உத்தேசித்து——"

இராமேசன் இந்த ஏற்பாட்டிற்கு உடன்பட்டு, அந்நத பாபுவின் மாத்திரைகளில் ஒன்றை வாங்கி விழுங்கிவிட்டு வீட்டிற்குத் திருமபினான்.

## அத்தியாயம் 13.

கமலாவின் பள்ளிக்கூடம் கலையும் நாள் சமீபித்தது. ஆனாலும் கமலா பள்ளிக்கூடத்திலேயே விடுமுறை நாட்களிலும் இருக்கட்டும் என்று பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயினியோடு ஏற்பாடு செய்திருந்தான் இராமேசன்.

அந்நத பாபுவுடன் ஸம்பாஷணை நடந்த மறுநாட் காலையில் கல்கத்தாவிலுள்ள திறந்த வெளிகளுள் முக்கியமான "மைதானத்"தில் உலாவிவரச்சென்றான் இராமேசன். கமலாவைப்பற்றி சமாசாரத்தையெல்லாம் ஹேமநளினியிடம் சொல்லி விடவேண்டும். பிற்பாடு கமலாவிடமும் உண்மையைச் சொல்லிவிடலாம். யாரும் தப்பெண்ணங்கொண்டு மனஸ்தாபப்படுவதற்கு இடங்கொடாமல் நடந்துகொள்ளவேண்டும். கமலாவும் ஹேமநளினியை சிநேகிதியாய்க்கொண்டு நம்மிருவருடனும் கூடக்குடியிருக்க சம்மதிப்பாள். சொந்த உறவினர் மத்தியில் குடியிருந்தால் ஒருவேளை அவர் கண்டபடியெல்லாம் பேசினாலும் பேசுவார்கள். ஆகையால் இந்த ஊரைவிட்டு "ஹஸாரி பாக்" என்ற ஊருக்குப் போய் அங்கே வகீலாய் இருக்கலாம் என்று தீர்மானித்தான்.

உலாவப்போனவன் திரும்ப வரும்போது அந்நத பாபுவின் வீட்டிற்குப்போனான். அங்கே மாடிப்படியில் ஹேமநளினியை சந்தித்தான். இப்படிச்சந்தித்ததும் சாதாரணமாய் அவளுடன் சற்று சம்பாஷணை செய்வது வழக்கம். ஆனால் இப்பொழுதோ ஹேமநளினி வெட்கத்துடன் அருணோதயத்து ஆகாயம்போல் அவள்முகம் மெல்லிய புன்னகைதாங்கி விளங்க—தலைகுனிந்த வண்ணம் வீட்டிற்குள் விரைந்து சென்றாள்.

இராமேசன் திரும்பத்தன் வீட்டிற்கு வந்தான் வந்ததும் சற்றுநேரம் ஹேமநளினி கற்றுக்கொடுத்த பாட்டை ஆர்மோனியத்தில் வாசித்தான், ஒரே பாட்டை எவ்வளவு நேரம்தான் வாசிக்க முடியும். பிறகு ஒரு காவியத்தை எடுத்து வாசிக்க முயன்றான். ஆனால் எந்த காவியத்தால் தன் மனது அப்போது அடைந்திருந்த உயரிய நிலையை எட்டிப் பிடிக்க முடியும்?

ஹேமநளினியும் அன்று முழுவதும் காற்றின் மேல நடப்பவள்போல் நடந்தாள். மத்தியானத்திற்குள் அவள் வீட்டுவேலையையெல்லாம் முடித்துவிட்டு தன்னறைக்குள் சென்று உட்கார்ந்துகொண்டு தையல்வேலை செய்யத் தொடங்கினாள். சுபாவமாய் அடங்கியிருக்கும் அவளது முகம் அத்யந்த சுகாநுபவத்தால் ஒளி வீசிப் பிரகாசித்தது. வாழ்க்கையின் பலனை அடைந்தபோது உண்டாகும் இன்ப உணர்ச்சியால் அவளுடைய உடல் பூரித்தது.

வழக்கமான "டீ" வேளைக்குச் சற்று முன்னமேயே இராமேசன் "ஆர்மோனியத்தையும் பாட்டுப் புஸ்தகத்தையும் வீசி யெறிந்துவிட்டு அந்நத பாபுவின் வீட்டிற்கு வந்துவிட்டான். சாதாரணமாய் ஹேமநளினி உடனே வருவாள், இன்றோ அவளுடைய இடம் காலியாயிருந்தது. மாடியில் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பேசும் அறையிலும் அவளைக் காணவில்லை. ஹேமநளினி இன்னும் தன்னறையை விட்டு வெளியே வரவில்லை. அந்நதபாபு மட்டும் வழக்கம்போல் வந்து "டீ" மேஜையருகில் தன்னிடத்தில் உட்கார்தார், இராமேசன் கதவின் புறத்தையே உற்று கவனித்துக்கொண்டிருந்தான்.

யார் காலடி அது? அக்ஷயனுடையது. இராமேசனைப் பார்த்து அதிகப் பிரியத்துடன் "இராமேச

பாபு, இப்போதுதான் உன் வீட்டிற்குப்போய் வருகிறேன்" இதைக் கேட்டதும், இராமேசன் சற்று மனம் கலங்கினுன்.

அக்ஷயன் சிரித்துக்கொண்டே "பயப்படாதேயும், இராமேசபாபு நான் உம்மை விழுங்கிவிடுவேனு. என்ன? நான் சண்டைக்கு வரவில்லை ஐயா, சந்தோஷசமாசாரத்கைக் கேட்டால் உம்முடைய நண்பர்கள் எல்லோரும் உம்மைக்கண்டு களிக்கவேண்டாமா? அதற்காகத்தான் போனேன் உம்முடைய வீட்டிற்கு."

அப்போதுதான் புலப்பட்டது அந்நதபாபுவுக்கு ஹேமநளினி அங்கே வரவில்லை என்பது. அவள் பேரைச் சொல்லிக் கூப்பிட்டார்; பதிலென்றுமில்லை. அவளைக்கூட்டிவர மாடிக்குச் செல்ருர்.

"இதென்ன. ஹேமா.? என் கீழேவரவில்லை? இன்னுமா தையல் வேலை? "டீ" சூடாறிப்போகிறது இராமேசனும் அக்ஷயனும் வந்திருக்கிருர்கள் எழுந்திரு "என்ருர்". "இல்லை, அப்பா, 'டீ'யை என்க்குமேலே அனுப்பிவிடு". இந்ததையலை முடித்தாகவேண்டும்" என்ருள் ஹேமநளினி. "நீ எப்போதும் இப்படிதான், ஹேமா, ஏதாவது ஒன்று ஆரம்பித்து விட்டால் மற்ற தெல்லாம் மறந்துவிடுகிருய், பரீக்ஷக்குப்படிக்கிறபோது புஸ்தகத்தை விட்டு மூக்கை உயர்த்த மாட்டேன் என்றிருந்தாய். இப்போதும் அப்படியே தையல்வேலையிலேயே ஆழ்ந்து ஒன்றையும் கவனிக்காமலிருக்கிருய் சீ! சீ! விட்டுவிடு இந்த வழக்கத்தை கீழே வா "டீ"க்கு". என்று அந்நதபாபு கட்டாயப்படுத்தித் தன் மகளைக்கீழே அழைத்துச்சென்ருர் அவள் நேராக "டீ"த்தட்டு இருக்குமிடம் சென்று "டீ"எடுத்து வார்ப்பதிலேயே கவனமாய், வந்திருக்கிற விருந்தாளிகளைக் கண்ணெடுத்துக் கூடப்பார்க்கவில்லை.

"இதென்ன, ஹேமா, எனக்கு ஏன் சர்க்கரை கொடுக்கிருய்? நான்தான் சர்க்கரை சாப்பிடுவதில்லை என்று தெரியாதா:"

அக்ஷயன் (நகைப்புடன்) அவளுடைய தாராள மனதை இன்று அடக்க முடியவில்லை. எல்லாரும் இனித்தபண்டம் கொடுக்கப்பார்க்கிருள்" என்ருன். ஹேமநளினியை இவ்விதம் பரிஹசித்து அக்ஷயன் தன் புத்திகூர்மையைக்காட்டுவதைக்காண இரமேசன் மனம் சகிக்கவில்லை. கல்யாணம் ஆனவுடன் தங்களுடைய நண்பர்கள் ஜாபிதாவிலிருந்து அக்ஷயன் பெயரை அடித்து விடவேண்டும் என்று தத்க்ஷனமே தீர்மானித்தான்! இராமேசன்.

சில நாட்களுக்குப்பின் இவர்கள் இவ்விதமே "டீ"மேஜைப் புறத்தில் உட்கார்நது போசிக்கொண்டிருக்கும்போது அக்ஷயன் திடீரென,

"இராமேசபாபு, உம்முடைய பெயரை உடனே மாற்றி விட்டால் நலம்" அக்ஷயன் பரிஹசிக்க முயலுவது இராமேசனுடைய வெறுப்பை அதிகரிக்கதே யொழிய வேறில்லை.

"ஏன் என்ருன் இராமேசன். "இதோபார்" உன்று ஒரு சமாசாரப் பத்திரிகையைப் பிரித்துக் கொண்டே ""இதோ பார், இங்கே இராமேசன் என்ற ஒருபையன் வேறு பையனைப் பரீக்ஷையில் தனக்காக எழுதச்சொன்னுனும் அப்படி எழுதிப்பரீக்ஷையில் தேறினுனும்.கடைசில் அவனுடைய கள்ளத்தனம் கண்டுபிடிக்கப்பட்டதாம்." இராமேசனுல் வெடுக்கென்று பதில் சொல்ல முடியாது என்பது ஹேமநளினிக்குத் தெரியும்; ஆகவே, அக்ஷயன் எப்போதாவது இப்படி இராமேசனைப் பார்த்து பாணங்கள் தொடுக்கத்தொடங்கினுல். உடனே பிரதிபாணங்கள் தொடுப்பதற்கு அவள் முன்வருவாள். அதுபோல இப்பொழுதும் முன் வருபவளாய், தன் கோபத்தை அடக்கிக்கொண்டு உல்லாசமாய் "அப்படிப்பார்த்தால்" ஜயிலெல்லாம் அக்ஷயன்களாக இருக்கு·ம்" "கேட்டீர்களா, இவள் சொல்வதை நான் ஏதோ சிநேகார்த்தமாய் எச்சரிக்கை செய்தேன். உடனே கோபித்துக் கோபித்துக்கொள்ளுகிருள். அப்படியானுல் முழுக்கதையையும் சொல்லிவிடுகிறேன். பெண் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற என் தங்கை "சரத்"தைத் தெரியாதோ உனக்கு? இப்போது பள்ளிக்கூடத்திற்கு விடுமுறைக்காலமா கையால் அவள் நேற்றுச்சாயங்காலம் வீட்டிற்கு வந்தாள். "உனக்குத்தெரியாதா, நம்முடைய இராமேச பாபுவின் மனைவி எங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிருள்" என்று சொன்னுள். சீ! பைத்தியமே, இராமேச பாப என்ருல் நம்முடைய இராமேச புாபுவா? அவர் ஒருவர்தானு இராமேச பாபு" என்றேன். "அவர் யாராயிருந்தாலும் இப்படித்தன் மனைவியிடம் கடினமாக இருக்கக்கூடாது. அநேகமாய்மற்றப் பெண்கள் எல்லாரும் விடுமுறைக்கு வீட்டிற்குப் போகிருர்கள். அவள்மட்டும் பாவம். அங்கேயே அழுதுகொண்டிருக்கிருள். என்று சொன்னுள். அப்போது எனக்குத் தோன்றிற்து, இதுசரியல்ல, மற்றவர்களும் 'சரத்'தைப் போல் பிசகு செய்வார்கள்; இதை இராமேசனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று.

அந்நத பாபுவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை 'அக்ஷயா' நீ சுத்தப் பைத்தியம் அடா! யாரோ ஒரு இராமேசன் தன் மனைவியை அழும்படி பள்ளிக்கூடத்தில் விட்டிருக்கிருன் என்பதற்காக, நம்முடைய இராமேசன் ஏன் தன் பெயரை மாற்றவேண்டும்" என்ருர்.

ஆனுல் இராமேசன் முகம் வெளுக்கவே அவன் உடனே அறையை விட்டு எழுந்து போய்விட்டான்.

"இதென்ன, இராமேசபாபு?" எங்கே போகிறீர் இவ்வளவு அவசரமாய்? என்மேல் கோபமா என்ன? நான் உம்மைச் சந்தேகித்தேன் என்று நினைத்தீர் என்று இராமேசனைப் பின் தொடர்ந்து சென்ருன் அக்ஷயன்.

"இதென்ன, இது?" என்று ஆச்சிரியப்பட்டார் அந்நதபாபு. ஹேமநளினியும் அழவே "இதென்ன, ஹேமா? ஏன் அழுகிருய்?" ஹேமநளினி அழுது கொண்டே என்ன போக்கிரித்தனம் அப்பா, அக்ஷயபாபுவுக்கு, நம்மகத்திற்கு வந்திருக்கும் மரியாதை மனுஷ்யரை இப்படி அவமானப்படுத்துவதா?"

"அக்ஷயன் விளையாட்டாகவன்றே பேசிக்கொண்டிருந்தான், அதைப் பற்றி ஏன் வருந்துகிருய்"—"இப்படிப்பட்ட விளையாட்டுகளை என்னுல் சகிக்கமுடியாது என்று சொல்லிக்கொண்டே மாடியிலுள்ள தன்னறைக்கு விரைந்து சென்ருள் ஹேமநளினி.

"Tamil World"—We are glad to notice the contents uniformly of a very high level o' excellence. Dr. Rabindranath's *Chitra*, with his sanction, has in it been fully translated into Tamil very ably, and we notice that the "Wreck" is now serially appearing. The thanks of the Tamil public are due both to the Poet and Messrs, Macmillan and Company for their generous permission to render such works into the Tamil language. We should here point out the rare spirit of arbanity and tolerance, so characteristic of the leading articles in the *Tamil World*. The jonrnal is conducted on healthy lines.—*New India*.

## துப்பறியும் நாவல்கள்.

### சுந்தர் சிங்

அல்லது பாஸ்கர விலாஸ் படுகொலை ரூ 1-12

### சிவ குமாரன்

அல்லது கொலைஞன் யார்? ரூ 1-0

### ஞானம்பாள்

அல்லது கள்வர் கவர்ந்த கல்யாணப் பெண் ரூ 0-12

### வி. நாராயணன் & கம்பெனி,

4, கொண்டி செட்டித் தெரு, சென்னை.

#### பரத நாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒரு புறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச் சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத் தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டு மென்பதே இந்நூலின் நோக்கமாகும். விலை ரூபா. 1—0—0

#### ஆரிய சரித்திரம். நீதிக் கதைகள்.

சுமார் 300-பக்கங்கள் உள்ளது; சித்திரப்படங்களும் அமையப்பெற்றது; நான்காம்பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா. 1—0—0

கணேஷ் கம்பெனி,

39, தம்புசெட்டித் தெரு, சென்னை.

## புத்தக விளம்பரங்கள்.

### சுதேசமித்திரன் புத்தகசாலை.

#### உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பீயர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஓதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது. விலை அணா 12.

#### பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரூ. 2.

#### வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

#### சுதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

#### பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோன்மணிகளுக்கு இநநூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்,
கிருஷ்ணஸ்வாமி சர்மா
அவர்களால் எழுதப்பட்டது.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய் | 0 | 4 |
| பண்டித மோதிலால் நேரு | 0 | 2 |
| மகாத்மா காந்தி | 1 | 8 |
| சித்தரஞ்சன தாஸ் | 0 | 12 |
| முஹம்மத் அலி, ஷவுகத் அலி | 1 | 0 |
| ஸ்வராஜ்யம் | 0 | 8 |
| லாலாலஜபதிராய் | 0 | 8 |
| சிவாஜி | 1 | 0 |

#### திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மடிக்கிளர்ச்சி யுண்டாக்கக்கூடியதாயுமுள்ளது. ஹாஸ்யச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமை யுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

## "தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் S. பட்டாபிராமன், எம். ஏ. ஆல் வெளியிடப் பட்டுவரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். சித்திராவென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ் நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை

சுதேசமித்திரன், 16—8—1922

## தமிழ் உலகு.
## (THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்

**தமிழ் வாரப் பத்திரிகை**

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விபரம்:—

| உள் நாடு. | வெளி நாடு. |
|---|---|
| ½-வருஷம் 3 0 0 | ½-வருஷம் 3 8 0 |
| 1-வருஷம் 5 0 0 | 1-வருஷம் 6 0 0 |

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றி குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். சித்திரா வென்னும் 'அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில்மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

விளம்பர விகிதம் :— சென்னை மைலாப்பூர், 16, பசுபதி அக்கிரஹாரம் "தமிழ் உலகு" மானேஜருக்கு எழுதி யறிந்துகொள்ளவும்.


## பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

**SILK PITAMBER Co.,**
**BENARES CITY.**

**Telegrams: "Adimoorthi" Benares.**



சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

## அமிர்தாஞ்சனம்

### எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

| படைமருந்து | பற்பொடி | மோஹினி தைலம் |
|---|---|---|
| டப்பி 1-க்கு | டப்பி 1-க்கு | டப்பி 1-க்கு |
| 0—6—0 | 0—2—0 | 0—12—0 |

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.


சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் T. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.